முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 18-07-2024

# ‘வெற்றி’ இந்தியா

நடைபெற்று முடிந்த சட்டமன்ற இடைத்தேர்தல்களில் பெரும்பான்மை இடங்களை ‘இந்தியா’ கூட்டணி கைப்பற்றி இருக்கிறது. பா.ஜ.க. கூட்டணி படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

**ஏழு மாநிலங்களில் 13 சட்டமன்றத் தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் 10 இடங்களைக் கைப்பற்றி இருக்கிறது ‘இந்தியா’ கூட்டணி. இரண்டே இடங்களில் தான் பா.ஜ.க.வால் வெல்ல முடிந்தது. ஒரு இடத்தில் சுயேட்சை வேட்பாளர் வென்றுள்ளார்.**

* தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றது. மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை தி.மு.க. வேட்பாளர் பெற்றார். எதிர்த்து போட்டியிட்ட 27 பேரின் வைப்புத் தொகை பறிபோனது.

* மேற்கு வங்கத்தில் 4 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. நான்கு தொகுதிகளையும் மேற்கு வங்கத்தை ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கைப்பற்றியது.

* இமாச்சலப் பிரதேசத்தில் 3 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. இரண்டு தொகுதிகளை காங்கிரஸ் கட்சியும், ஒரு தொகுதியை பா.ஜ.க.வும் கைப்பற்றியது.

* உத்தரகாண்ட் மாநிலத்தில் இடைத்தேர்தல் நடைபெற்ற இரண்டு தொகுதிகளையும் காங்கிரஸ் கட்சி கைப்பற்றியுள்ளது.

* பஞ்சாப் மாநிலத்தில் இடைத்தேர்தல் நடைபெற்ற ஒரு தொகுதியை ஆம் ஆத்மி கட்சி கைப்பற்றியது.

* மத்தியப் பிரதேச மாநிலத்தில் இடைத்தேர்தல் நடைபெற்ற ஒரு தொகுதியை பா.ஜ.க. கைப்பற்றியது.

* பீகார் மாநிலத்தில் நடந்த இடைத்தேர்தலில் சுயேட்சை வேட்பாளர் வென்றிருக்கிறார்.

– இவைதான் இடைத்தேர்தல் முடிவுகள் ஆகும். காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி ஆகிய அனைத்தும் ‘இந்தியா’ கூட்டணி யில் இடம்பெற்றுள்ள கட்சிகள் ஆகும். ‘இந்தியா’ கூட்டணிக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது. தமிழ்நாடு, மேற்கு வங்கம், இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப் ஆகிய மக்களின் மனநிலை என்ன என்பதை இத்தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. **‘இந்தியா’ கூட்டணிக்கான ஆதரவு மட்டுமல்ல, பா.ஜ.க.வுக்கு எதிரான மனநிலை இருப்பதையும் இது தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தி.மு.க. தன்னிடம் இருந்த விக்கிரவாண்டி தொகுதியை தக்க வைத்துக் கொண்டுள்ளது. மேற்கு வங்கத்தில் இடைத்தேர்தல் நடைபெற்ற மூன்று தொகுதிகள் பா.ஜ.க. வசம் இருந்த தொகுதிகள் ஆகும். அந்த தொகுதிகளின் பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் அக்கட்சியில் இருந்து விலகி திரிணாமுல் காங்கிரஸில் சேர்ந்ததால் இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்த மூன்று தொகுதிகளையும் இப்போது திரிணாமுல் காங்கிரஸ் கைப்பற்றி இருக்கிறது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் இப்போது பா.ஜ.க. ஆட்சி நடக்கிறது. ஆனால் நடைபெற்ற இரண்டு தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களிலும் ஆளும் பா.ஜ.க. தோல்வியைத் தழுவியது. காங்கிரஸ் கட்சியே இரண்டு தொகுதிகளையும் கைப்பற்றி உள்ளது. பஞ்சாப் மாநிலத்தில் இப்போது இடைத்தேர்தல் நடைபெற்ற ஜலந்தர் மேற்கு தொகுதியானது ஆம் ஆத்மி வசம் இருந்தது. அங்கிருந்த எம்.எல்.ஏ. ஆம் ஆத்மியில் இருந்து விலகி பா.ஜ.க.வில் சேர்ந்தார். அதனால் இடைத்தேர்தல் நடந்தது. பா.ஜ.க. தோற்று, ஆம் ஆத்மி வென்றுள்ளது.

மத்தியப் பிரதேசத்தில் பா.ஜ.க. ஒரு தொகுதியில் வென்றுள்ளது என்றாலும், வாக்கு வித்தியாசம் 3 ஆயிரம் தான். விக்கிரவாண்டியில் தி.மு.க. 67 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வென்றுள்ளதையும், மத்தியப் பிரதேசத்தில் 3 ஆயிரத்தில் பா.ஜ.க. வென்றுள்ளதையும் வைத்துப் பார்த்தால் வெற்றியின் வித்தியாசத்தையும் உணரலாம்.

பீகார் மாநிலத்தில் ஆளும் ஐக்கிய ஜனதா தளம் – பா.ஜ.க. கூட்டணி படுதோல்வியைச் சந்தித்துள்ளது. இக்கூட்டணி சார்பில் கமலாதர் பிரசாத் என்பவர் களம் இறக்கப்பட்டார். ஆனால் அங்கு போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர் சங்கர் சிங் வென்று விட்டார். இந்த தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் போட்டியிட்ட ராஷ்டீரிய ஜனதா தளத்தின் வேட்பாளர் பிமா பாரதியைத் தோற்கடிக்க ஐக்கிய ஜனதா தளமும் பா.ஜ.க.வும் கடுமையான பரப்புரை செய்தன. ஆனால் அந்தக் கூட்டணியும் தோற்று சுயேட்சை வேட்பாளர் முன்னால் வந்துவிட்டார். இதுவும் பா.ஜ.க. கூட்டணிக்கு ஏற்பட்ட தோல்வி தான்.

அந்த வகையில் மத்தியப் பிரதேசம் நீங்கலாக மற்ற ஆறு மாநிலங்களிலும் பா.ஜ.க. படுதோல்வியை அடைந்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் 370 இடங்களை வெல்வோம், 400 இடங்களை வெல்வோம் என்று சொல்லிக் கொண்டிருந்தது பா.ஜ.க.. ஆட்சி அமைக்கத் தேவையான 272 என்ற எண்ணிக்கையைக் கூட அவர்களால் கைப்பற்ற முடியவில்லை. 240 க்குள் முடக்கப்பட்டது பா.ஜ.க.. இது பா.ஜ.க.வுக்கு கிடைத்த தோல்வி தான். தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதா தளம் மற்றும் சில உதிரிக் கட்சிகள் ஆதரவுடன் ஆட்சியை அமைத்துள்ளார் நரேந்திர மோடி. இந்த தோல்வியானது அவரது முகத்தில் நன்றாகத் தெரிகிறது. அந்த தோல்வி முகத்தின் தொடர்ச்சியாகவே ஏழு மாநில இடைத்தேர்தல் முடிவுகளையும் பார்க்க வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலில் அயோத்தி ராமர் கோவில் அமைந்திருக்கும் பைசாபாத் தொகுதியில் பா.ஜ.க. தோற்றதைப் போலவே, இந்த இடைத் தேர்தலில் உத்தரகாண்ட் மாநிலம் பத்ரிநாத் தொகுதியிலும் பா.ஜ.க. தோற்றுள்ளது. புனித பூமி என்று சொல்லப்படுவது பத்ரிநாத் நகரம். **மக்களின் ஆன்மிக உணர்வுகளுக்கும் அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டு இவை.**

**“தோல்விகளில் இருந்து பா.ஜ.க. பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். மாநில உணர்வுகளை மதிக்காமல் ஆட்சியையும் கட்சியையும் நடத்த முடியாது என்பதை பா.ஜ.க. இனியாவது உணர வேண்டும்”** என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி இருப்பதை இனியாவது பா.ஜ.க. உணர வேண்டும்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, அபிவிருத்தி மற்றும் படைப்புகள் ஆகியவற்றில் சிறந்த 10 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளை வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி கவிதா ராமு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.07.2024) சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் அமையவுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டரங்க கட்டடப் பணிகளை ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின்போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## நாமக்கல் கிழக்கில் 29 பேருக்கு கல்வி உதவித்தொகை!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல் ஜூலை 18-

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் நாமக்கல், சேந்தமங்கலம், ராசிபுரம் ஆகிய தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர்களில் உள்ள கழக நிர்வாகிகளின் குழந்தைகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது.

மாவட்ட தி.மு.க. அவை தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்கினார் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு 29 மாணவ, மாணவிகளுக்கு 22 லட்ச ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், இன்றைய தினம் 29 பேருக்கு ரூ.22 லட்சம் கல்வி உதவித் தொகையை வழங்குகிறோம். சென்ற கல்வி ஆண்டில் ஏறத்தாழ வழங்கியது 27 பேருக்கு ஒரு கோடியே 65 லட்சத்தில் 50 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறோம். திமுக மிகப்பெரிய ஒரு ஆலமரம் இந்த ஆலமரத்தின் அடி வேர்களாக இருக்கக்கூடியது கிளைக் கழகத்தினுடைய செயலாளர்களும், பிரதிநிதிகளும், கிளைகளை பணியாற்ற கூடிய அவர்கள் தான் இது ஆலமரத்தின் அடி வேர்கள் என்று தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அவர்கள் எந்த நேரத்திலும் இந்த இயக்கம் தனக்கு என்ன செய்தது என்கின்ற அந்த எண்ணம் இல்லாமல் பணியாற்றுவார்கள். அதற்கு ஒரு அடையாளமாக இருக்க வேண்டும் என்கின்ற அந்த எண்ணத்தில் அவர்களுடைய குழந்தைகளுக்கு மேற்படிப்புக்காக கல்வி உதவித் தொகையாக தொழிற்கல்வி படிப்புக்கு ஒரு லட்ச ரூபாயும், மற்ற துறை உயர்கல்விக்கு ஐம்பதாயிரம் ரூபாயும், முதுகலை பட்டம் பெறக்கூடியவர்கள் வாய்ப்பு இருந்தாலும் அவர்களுக்கு முதுகலை பற்றும் எம்.சி.ஏ படித்தாலும் எம்எஸ்சி படித்தாலும் அவர்களுக்கு அந்த கல்வி உதவி தொகை நாம் வழங்கி வருகிறோம் என்றார்.

தொடர்ந்து அமைச்சர் மதிவேந்தன் பேசுகையில், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் கே ஆர் என் இராஜேஸ்குமார் திமுக உறுப்பினர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் குடும்பத்தினருக்கு கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பிறப்பு, இறப்பு மட்டுமின்றி திருமண உதவி, கல்வி உதவி, மருத்துவ உதவி என தொடர்ந்து உதவி வழங்கி வருகிறார். இதுவரை எந்த மாவட்ட செயலாளர்களும் செய்யாத உதவிகளை வழங்கி வருகிறார். தமிழ்நாடு முதலமைச்சர் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்விக்காக பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார். மாணவச் செல்வங்கள் படிப்பில் கவனம் செலுத்தி உயர்ந்த நிலைக்கு வர வேண்டும். அரசு பணியில் பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக மிளிர்கிறது அந்த அளவுக்கு பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார் என்றார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர்கள் நலங்கிள்ளி, ராணி பெரியண்ணன், மாவட்ட பொருளாளர் ஏ.கே.பாலச்சந்திரன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.இராமசுவாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மருத்துவர் இராமாயவன், அரசு வழக்கறிஞர் கே.செல்வம், மாவட்ட நிர்வாகிகள் காளியப்பன், குணசேகரன், சுசிதரன், சரவணன், விமலா சிவக்குமார், பூவராகவன் மாநில நிர்வாகிகள், ப.ராணி, இரா.நக்கீரன், சி.ஆனந்தகுமார்,

நகர திமுக செயலாளர்கள் ராணா ஆனந்த், பூபதி, சிவக்குமார், என்.ஆர். சங்கர், ஒன்றிய திமுக செயலாளர்கள் அசோக் குமார், ஜெகநாதன், கௌதம், பாலசுப்பிரமணியம்,

ஆர் எம் துரைசாமி, செந்தில் முருகன், ஜெயப்பிரகாஷ், பழனிவேல், பேரூர் திமுக செயலாளர்கள் சி.செல்லவேல் பழனியாண்டி பொன். நல்லதம்பி, சுப்பிரமணியம், கண்ணன், செல்வராஜ், அன்பழகன், சார்பு அணி நிர்வாகிகள் இளம்பரிதி, சித்தார்த், கிருபாகரன், பிரபாகரன், கலைவாணன், நாசர் பாஷா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினை நல்ல வார்த்தை கொண்டு காலம் பாராட்டும்!



முதலமைச்சரின்
காலை உணவுத்திட்ட
விரிவாக்கம்
ஒரு கல்விப் புரட்சியைப்
பூரணம் செய்யும் காரணமாகும்

மூளையை நிரப்புமுன்
வயிற்றை நிரப்பும்
இந்த
மனிதாபிமானத் திட்டத்தால்
முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை
மொழியின்
நல்ல வார்த்தைகள் கொண்டு
காலம் பாராட்டும்

வயிறு நிறைந்த மலர்களின்
21 லட்சம் புன்னகை
ஆட்சிக்குக் கிட்டிய
ஆசீர்வாதமாகும்

ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் கண்ட இயக்கம்
மாணவர்களின் சிரிப்பில்
ஸ்டாலினைக் காண்கிறது



கவிப்பேரரசு
**வைரமுத்து**